## DEPOSITION OF WITNESS

In the Court of District Munsif cum Judicial Magistrate, Cheyyur
CC Case No. 76/2025
Prosecution witnesses. PW1, LW1

| | |
|---|---|
| பெயர். திரு. குமரேசன் | ஜாதி. |
| தந்தை பெயர்.திரு.பலராமன் | தொழில். |
| கிராமம். | சமயம். |
| தாலுக்கா. | வயது. |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 31st day of August, 2026**

(எதிரி தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்).

<u>முதல் விசாரணை</u>:-

1. நான் தற்போது மதுராந்தகம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 05.02.2025 அன்று நான் மதுராந்தகம் மதுவிலக்கு அமல் பிரிவில் முதல் நிலை காவலராக பணியில் இருந்தபோது காவல் ஆய்வாளர் திருமதி.மங்களபிரியா அவர்களுடன் என்னுடன் முதல் நிலை காவலர் முத்து ஆகியோர் சகிதம் மதுவிலக்கு வேட்டையாக சூணாம்பேடு அருகில் உள்ள கிராமங்களில் அருகே மதியம் 12.30 மணிக்கு கண்காணித்து கொண்டிருந்தபோது நீதிமன்ற ஆஜர் எதிரி பாலமுருகனை மடக்கி பிடித்து விசாரணை செய்தபோது பாண்டிச்சேரியிலிருந்து அரசு அனுமதியின்றி புளூ கிரேப் பிராந்தி பாட்டில்கள் 20 மற்றும் ரூ.200/- பணம் ரொக்கமாக இருந்ததை காவல் ஆய்வாளர் கைப்பற்றினார். மேற்படி காவல் ஆய்வாளர் தயார் செய்த கைப்பற்றுதல் மகசரில் நானும், முத்துவும் கையொப்பம் செய்தோம். **(மேற்படி கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (மேற்படி கைப்பற்றப்பட்ட 20 புளூ கிரேப் பாட்டில்கள்**

**அ.சா.பொ.1 வரிசையாகவும் ரூ.200/- ரொக்க பணத்தையும் அ.சா.பொ.2 வரிசையாகவும் குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி ஆஜர் எதிரியை கைது செய்து காவல் நிலையம் அழைத்து வந்து வழக்கு பதிவு செய்யப்பட்டது. காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

3. சம்பவ இடத்திற்கு எதனடிப்படையில் சென்றேனா என்றால் மதுவிலக்கு வேட்டைக்காக ரோந்து செல்வது வழக்கம். சம்பவம் இடத்திற்கும், காவல் நிலையத்திற்கும் எத்தனை கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் 25 கிமீ தூரம் இருக்கும். பொதுமக்கள் சாட்சிகளை யாரையாவது விசாரித்தோமா என்றால் இல்லை. நாங்கள் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் புள்ளி விவர கணக்கிற்காக எங்கள் ஆய்வாளர் போட்ட பொய் வழக்குக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சம்பவ இடம் சென்றிருந்தால் எங்கள் ஆய்வாளர் வரைபடம் தயார் செய்து பொதுஜன சாட்சிகளை சாட்சியாக விசாரித்திருப்பார் என்றாலும் எதிரிக்கும், இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது)**
**மறு விசாரணை...** இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.